1986 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் குடும்பத்தாருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த உறுப்பினர் திரு. பிச்சை அவர்களை ஓரளவிற்கு நன்கு அறிவேன். தொகுதி மக்களுக்காக நன்றாகப் பாடுபட்டவர். தொகுதி மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றவர். ஒரு சட்டமன்ற உறுப்பினர் எப்படி மக்களுக்காகப் பாடுபடவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் அவர். அவர் அவர்களது தொகுதி மக்களோடு அன்றாடம் பழகி நல்லமுறையில் பணியாற்றியிருக்கிறார்கள், கடமையாற்றி யிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட சட்டமன்ற உறுப்பினரை இந்த மாமன்றம் இன்றைக்கு இழந்திருக்கிறது. தமிழகத்திற்கே இது இழப்புதான். அந்தத் தொகுதிக்கு பெருமளவு இழப்புதான் என்பதை நான் உணர்கிறேன். ஆகவே நீங்கள் எல்லோரும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களோடு என்னுடைய அனுதாபத் தையும் இரங்கலையும் அவையின் சார்பிலும் என் சார்பிலும் மறைந்த நம்முடைய மாமன்ற உறுப்பினர் பிச்சை அவர்களுடைய குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.30)

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

3. அறிவிப்பு

பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று எடுத்துக் கொள்ளப் படவிருந்த நிதி அமைச்சர் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை களுக்கான பதிலுரையும், பொதுப் பணித் துறை அமைச்சர் குறித்த மானியக் கோரிக்கைகளுக்கான விவாதமும் பதிலுரையும் நாளை எடுத்துக் கொள்ளப்படும். நாளையும் கேள்வி நேரம் இல்லை.

நாளை எடுத்துக்கொள்ளப்படவிருந்த தொழிலாளர் நலன் குறித்த மானியக் கோரிக்கை எடுத்துக் கொள்ளப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

பேரவை உறுப்பினர் திரு. மு. பிச்சை அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

நாளை (30—4—1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை காலை 9-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.